Case No.DVC.13/21 21.03.2023

**மனுதாரர் ம.சா.1 மாதவி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1ம் எதிர்மனுதாரர் முனியசாமி எனது அத்தை மகன் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து நான்கு வீடுகள் தள்ளி முனியசாமியின் வீடு உள்ளது. எங்கள் வீடு சந்துக்குள் உள்ளது. எனக்கும், முனியசாமிக்கும் பழக்கம் ஏற்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் அவர் காவல் துறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். அப்போது சென்னையில் டிரெயினிங்ல் இருந்தார். காவல் துறையில் வேலைக்கு சேர்ந்த பிறகு ஊருக்கு எப்போதாவது தான் வருவார் என்றால் சரிதான். எங்கள் ஊரை சேர்ந்த அ.தி.மு.க ஒன்றிய செயலாளர் சண்முகக்கனி எனது உறவினர்தான். எனது திருமண சமயத்தில் அ.தி.மு.க கட்சி ஆளும் கட்சியாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது அ.தி.மு.க ஆட்சியில் இருந்த காரணத்தால் மேற்படி சண்முககனி அதிகார தோரணையில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. 5.1.2014 ம் தேதி முனியசாமி சபரி மலை ஐயப்பனுக்கு மாலை அணிந்திருந்தார் என்றால் சரிதான். 5.1.2014 ம் தேதி ஓடைபட்டி, வன்னிவிநாயகர் கோவிலுக்கு அழைத்து சென்று கையில் தாலியை வைத்திருப்பது போல் போட்டோ மட்டும் எடுத்தார்கள் என்றால் சரிதான். முனியசாமி சபரி மலைக்கு மாலைஅணிந்திருந்ததால் தாலி கட்ட கூடாது என்பதால் போட்டோ மட்டும எடுத்து கொண்டோம், தாலி கட்டவில்லை. ஓடைபட்டி, வன்னிவிநாயகர் கோவிலுக்கு முனியசாமியின் தம்பி மற்றும் தாய்மாமா சமுத்திரம் வந்திருந்தார்கள். முனியசாமியின் பெற்றோர்கள் வரவில்லை. 5.1.2014 ம் தேதி எனக்கு திருமணம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான், காவல் நிலையத்தில் தாலிகட்ட சொன்னார்கள், முனியசாமி சரி என்று சொல்லிவிட்டு கோவிலுக்கு வந்து மாலை போட்டிருப்பதால் தாலி கட்ட முடியாது என்று கூறிவிட்டார். காவல் நிலையத்தில் முனியசாமி தாலி கட்டுவதாக சம்மதித்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. முனியசாமி என்னை கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை எத்தனை நாட்கள் நடந்தது என்றால் மார்கழி மாதம் 22ம் தேதி 2014ம் வருடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், முதல்நாள் காவல்நிலையத்தில் விசாரணை செய்தார்கள், இரண்டாம் நாள் முனியசாமியை தாலி

கட்ட சொன்னார்கள், 5 வது நாள் ஓடைப்பட்டி விநாயகர் கோவிலில் தாலி கட்டுவது போல் போட்டோ எடுத்து கொண்டோம். நான் பல ஆண்களுடன் தொடர்பு வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. ஓடைபட்டி விநாயகர் கோவிலில் தாலி கட்டுவது போல் போட்டோ எடுக்க முனியாமி விருப்பம் இல்லாமல் தான் வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்றால் முனிசாமியை வேலையை காலி செய்து விடுவோம் என்று போலீசார் விசாரணையின் போது கூறினார்களா என்றால் இல்லை. அவ்வாறு வேலைக்கு பாதிக்கு ஏற்படுத்துவதாக போலீசார் சொன்னார்கள் என்றும் அதை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலுமே சரியல்ல.

4. எனக்கும், முனியசாமிக்கும் எந்த காலத்திலும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. தாலி கட்டுவது போல் போட்டோ எடுத்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து திருமணத்தை பதிவு செய்தோம் என்றால் காவல் நிலையத்தில் சபரி மலைக்கு போய் வந்தவுடன் திருமணத்தை பதிவு செய்துகொள்வதாக முனியசாமி கூறினார், அவ்வாறு அவர் மலைக்கு சென்று வந்தவுடன் நாங்கள் போய் கேட்டதற்கு அவர் ஒன்றும் சொல்லவில்லை, முனியசாமியின் தாய்மாமாவிடம் சென்று இது பற்றி கூறினேன், அவர்கள் திருமணத்தை பதிவு செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள், அதன் பிறகு நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன், அதன் பிறகு முனியசாமி திருமணத்தை பதிவு செய்ய ஒப்புகொண்டார், 21.01.2015 ம் தேதி திருமணத்தை பதிவு செய்தோம். முனியசாமியின் தாய்மாமா தான் திருமணத்தை பதிவு செய்ய முடியாது என்று சொன்னாரா என்றால் முனியசாமியும் தான் சொன்னார். அவ்வாறு திருமணத்தை பதிவு செய்ய மறுத்த மறுநாள் நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன். மேற்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் பெயரில் மனு சாத்தூர் தாலுகா காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தது. சாத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் என்னை விசாரணை செய்யவில்லை.

5. திருமணத்தை பதிவு செய்ய எனது தரப்பில் எனது அம்மா பரமேஸ்வரி, பெரியப்பா பேச்சிமுத்து ஆகியோர்கள் வந்தார்கள், சற்று நேரம் கழித்து சண்முககனி வந்தார். முனியசாமி தரப்பில் இருந்து அவரது அம்மா மற்றும் மாமா ஆகியோர்கள் வந்ததிருந்தார்கள். முனியாசமியின் அம்மா மற்றும் மாமா வந்தார்கள், ஆனால் அவர்கள்

கையெழுத்து செய்தார்களா என்று நான் பார்க்கவில்லை. முனியசாமியின் அம்மா மற்றும் மாமா சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. முனியசாமியின் குடும்பத்தை சேர்ந்த அப்பா அல்லது அம்மா திருமண பதிவில் கையொப்பம் செய்யாத காரணத்தினால் அந்த பதிவு சான்றிதழ் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பதிவு திருமணம் செய்த பிறகு முனியசாமி என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். முனியசாமி என்னுடன் எப்போதும் சேர்ந்து வாழ்ந்தது இல்லை என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்ததும் முனியசாமியின் குவார்ட்டரஸ்க்கு என்னை அழைத்து செல்ல கூறினார்கள், குவார்ட்டரசில் அவருடன் ஒன்றாக இருந்தேன். குவார்ட்டரசில் நான் மட்டும் தான் இருந்தேன் என்றால் முனியசாமியும் உடன் இருந்தார். குவார்ட்டரசில் முனியசாமி என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. குவார்ட்டரசில் முனியசாமி என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்பதால் மீண்டும் காவல் நிலையத்தில் மனு கொடுத்தேனா என்றால் என்னுடன் சேர்ந்து வாழவில்லை, சாப்பாட்டிற் குபணம் எதுவும் கொடுக்கவில்லை என்று விருதுநகர் மகளிர் காவல் நிலையத்தில்புகார் கொடுத்தேன். மேற்படி மகளிர் காவல் நிலையத்தில் நடந்த விசாரணையில் எனக்கு முனியசாமியை மாதம் ரூ.3000/– கொடுக்க சொன்னார்கள். அவ்வாறு முனியசாமி கொடுத்த பணத்தை வாங்கியவுடன் நான் எனது பெற்றோர் வீட்டுக்கு வந்து விடுவேன் என்றால் சரியல்ல.

6. குவார்ட்டரசில் நான்கு மாதங்கள் வசித்தேன். நான் குவார்ட்டரசில் 10 நாட்கள் கூட இல்லை என்றால் சரியல்ல. பணம் கொடுக்கவில்லை என்பதால் எதிர்மனுதாரர்கள் மீது சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை கேட்பதாக புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எனது மகளுக்கு உடல்நிலை சரியில்லாத போது எனது மாமியார் எனது மகளை கீழே தள்ளி விட்டு விட்டார் அதனால் நான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், அவர்கள் வரதட்சணை கொடுமை என்று எழுதி கொண்டார்கள். 3ம் எதிர்மனுதாரர் எனது மகளை தள்ளி விட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், முனியசாமிக்கும் எனது குழந்தைக்கும் DNA பரிசோதனை செய்ய நீதிமன்றத்தில் உத்தரவு போட்டார்கள் என்றால் சரிதான். DNA பரிசோதனைக்கு நான் சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. 7.11.2020ம் தேதி சாத்தூர் நீதித்துறை நடுவர்

எண்.1 நீதிமன்றத்தில் DNA பரிசோதனைக்கு மீண்டும் உத்தரவு போட்டார்கள் என்றால் நான்மதுரையில் மருத்துவமனையில் இருந்த போது ஒரு பெண் உதவி ஆய்வாளரும், ஒரு பெண் தலைமை காவலரும் பரிசோதனை செய்ய வேண்டும் என்று மருத்துவமனைக்கு வந்தார்கள், அப்போது எனது குழந்தைக்கு இரத்தம் குறைவாக இருந்ததால் இரத்தம் ஏற்றி கொண்டு இருந்தார்கள், அப்போது மருத்துவர் இரத்தம் ஏற்றுவதால் DNA பரிசோதனை செய்ய கூடாது என்று கூறியதால் நான் பரிசோதனைக்கு சம்மதிக்கவில்லை. மருத்துவர் இரத்தம் ஏற்றுவதால் DNA பரிசோதனை செய்ய கூடாது என்று கூறியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான்தான் சம்மதிக்கவில்லை என்றாலும் சரியல்ல. DNA பரிசோதனை செய்தால் குழந்தை யாருக்கு பிறந்தது என்று தெரியவரும் என்பதால் நான் DNA பரிசோதைனக்கு சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல.

7. காளீஸ்வரி என்ற குழந்தை எனக்கும், முனியசாமிக்கும் பிறக்கவில்லை என்றாலும் வேறு யாருக்கோ பிறந்த குழந்தை என்றாலும் சரியல்ல. 2.11.2020ம் தேதி எனது மகளுக்கு சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனைக்கு சென்றேன், எனது மகளுக்கு முடியவில்லை என்று மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று கூறிவிட்டுதான் சென்றேன், DNA பரிசோதனை செய்ய விருதுநகர் மருத்துவமனைக்கு எனது மகளை அழைத்து செல்ல சொன்னார்கள், நான் 2.11.2020ம் தேதி இரவு விருதுநகர் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எனது குழந்தைக்கு மூச்சு திணறல் அதிகமாக இருந்ததால் பார்கக முடியாது என்றும் உடனடியாக மதுரைக்கு அழைத்து செல்லுமாறும் கூறினார்கள், நான் இரவு 9.00மணிக்கு எனது மகளை மதுரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மதுரை மருத்துவமனையில் 2.11.2020ம் தேதி முதல் எனது மகள் இறக்கும் வரை மதுரை மருத்துவமனையில் இருந்தோம். DNA பரிசோதனை மேற்கொள்ள வரும் போது எனது மகள் நல்ல ஆரோக்கியத்துடன இருந்தார் என்றால் சரியல்ல. எனது மகள் 17.11.2020ம் தேதி மருத்துவமனையில் வைத்து இறந்து விட்டது. 17.11.2020ம் தேதி மாலை 3.00மணியளவில் எனது குழந்தையின் பிரேதத்தை மேட்டுப்பட்டியில் உள்ள எனது வீட்டுக்கு கொண்டு சென்றேன். எனது மகளின் இறப்பிற்கு சம்பிரதாய சடங்குகள் எதுவும் செய்யவில்லை. நானும், எனது அம்மாவும் DNA பரிசோதனை செய்தால் உண்மை தெரியவரும் என்பதால் எனது மகளை கொன்று விட்டோம் என்றால் நாங்கள் 3 வருடமாக மதுரை

மருத்துவமனையில்வைத்து பார்த்தோம், நாங்கள் கொல்லவில்லை. மதுரையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோமா அல்லது தனியார் மருத்துவமனையில் எடுத்தோமா என்றால் அரசு மருத்தவமனையில் சிகிச்சை எடுத்தோம் பின்னர் மருத்துவ காப்பீடு மூலம் மீனாட்சி மிஷன் மருததுவமனைக்கு அனுப்பி வைத்தார்கள், அங்கு 7 மாதங்கள் சிகிச்சை எடுத்தோம். மருத்துவ சிகிச்சைக்காக பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் இடம இருந்து 18.2.2020ம் தேதி 20லட்சம் ரூபாய் பெற்று கொண்டோமா என்றால் 20லட்சம் பணம் எதுவும் வாங்கவில்லை காப்பீடு மூலமாக மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். காப்பீட்டில் சிகிச்சை செய்து கொள்ளவில்லை என்றாலும் மேற்படி பாராளுமன்ற உறுப்பினரிடம் 20லட்சம் ரூபாய் பெற்றுதான் சிகிச்சை செய்தோம் என்றாலும் சரியல்ல.

8. முனியசாமி என்னை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்து உடலுறவு கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை பிறந்த போது முனியசாமிக்கு தகவல் கொடுத்தும் அவர் வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை பிறந்து ஐந்தாவது நாளில் எனக்கும், முனியசாமிக்கும் திருமணம் நடைபெற்றது. எனக்கும், எதிர்மனுதாரர் தரப்பிற்கும் பிரச்சினை ஏற்பட்ட பின்பு எங்களுக்கும், அவர்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனக்கும், முனியசாமிக்கும் திருமணம் ஆகாததால் இருவருக்கும் கணவன், மனைவி உறவு கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும், முனியசாமிக்கும் கணவன், மனைவி உறவு முறை இல்லாத காரணத்தினால் அவர் எனக்கு ஜீவனாம்ச தொகை கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கேட்க எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் வெங்டேஸ்வரா மில்லி வேலை செய்து தினமும ரூ.500 சம்பளமாக பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல, தினக்கூலி ரூ.250தான் மாதம் ரூ.7000 சம்பளம், அந்த தொகை எனது கடனை அடைப்பதற்கே சரியாகிவிடும். எனது மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. நான், சண்முககனி மூலம் பல தேதிகளில் திருமண பத்திரிக்கை அடித்து எதிர்மனுதாரர்களை மிரட்டி உள்ளோம் என்றால் சரியல்ல, ஊர் பெரியவர் என்ற முறையில் சண்முககனி தலைமையில் எல்லோருக்கும் திருமணம் நடத்துவார்கள், எனது கணவரின் தம்பிக்கும் அவர்தலைமையில்தான் திருமணம் நடைபெற்றது.

சண்முககனி எங்கள் ஊர் தலைவரா என்றால் அது பற்றி தெரியாது. முனியசாமியின் தம்பிக்கு சண்முககனி தலைமையில் திருமணம் நடைபெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அந்த கல்யாண பத்திரிக்கை என்னிடம் உள்ளது.